சுருக்கம்

இந்து சமய அறநிலையத்துறை – தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, பிரிவு 46(iii)–ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்ட திருக்கோயில்கள் – திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் – பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் நியமனம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி3.1) துறை

அரசாணை (ப) எண்.24

நாள்.10.01.2025
குரோதி, மார்கழி–26
திருவள்ளுவராண்டு –2055

படிக்கப்பட்டது:–

1. அரசு கடித (நிலை) எண்.2, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி.3.1) துறை, நாள்.05.01.2022.
2. அரசாணை (ப) எண் 155, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 3–1) துறை நாள் 24.07.2024.
3. இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் கடித ந.க.எண்.734850/ 2024/அ2, நாள்.01.08.2024.

----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகைக்குட்பட்ட, சட்டப்பிரிவு 46 (iii)–ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்டுள்ள திருக்கோயில்களுக்கு பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்களை நியமனம் செய்திட உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, பிரிவு 46(iii)ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்டுள்ள திருக்கோயில்களுக்கு பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்களை நியமனம் செய்திட, விண்ணப்பதாரர்களை தெரிவு செய்து உரிய பெயர்ப்பட்டியல் தயாரித்து அரசுக்கு அளித்திட மாநிலக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, பிரிவு 47(1)(a)(iii)–ன்படி, சட்டப்பிரிவு 46(iii)–ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்டுள்ள திருக்கோயில்களுக்கு, அறங்காவலர் குழு அரசால் அமைக்கப்பட வேண்டும்

மற்றும் சட்டப்பிரிவு 47(1)(c)–ன்படி, 3 நபர்களுக்கு குறையாமல் மற்றும் 5 நபர்களுக்கு மிகாமல் அக்குழு அமைக்கப்பட வேண்டும். அதில் ஒரு உறுப்பினர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் வகுப்பை சேர்ந்தவராகவும் ஒரு உறுப்பினர் மகளிராகவும் இருத்தல் வேண்டும்.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், சட்டப்பிரிவு 46(iii)ன் கீழ் பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில் எனவும், இத்திருக்கோயிலுக்கு பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்களை நியமனம் செய்யும் பொருட்டு, விண்ணப்பங்கள் வரவேற்று அறிவிப்பு வெளியிடப்பட்டது எனவும் அதன் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் சரக ஆய்வர் விசாரணைக்கு அனுப்பப்பட்டு கள விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும், கள விசாரணை அடிப்படையில் சரக ஆய்வரால் சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கை கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்ட மாநிலக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, தெரிவு செய்து பரிந்துரைத்துள்ள நபர்களின் பட்டியலை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

5. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்டுள்ள மாநிலக் குழு வழங்கியுள்ள பட்டியலை அரசு கவனமுடன் பரிசீலித்து, கீழ்காணும் 5 நபர்களை திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்களாக நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது:–

1. திரு. க.தனசேகர், த/பெ, கந்தசாமி,
   எண். 128/69, முதல் தெரு, புது அழகாபுரம்,
   சேலம் வட்டம், சேலம் மாவட்டம்–636016.

2. திரு. சு.பாலசுப்பிரமணி, த/பெ. சுப்பையா,
   எண். 5/168, கிழக்கு வீதி, S வாடிப்பட்டி அஞ்சல்,
   கதிரையன்குளம், சில்வார்பட்டி வழி,
   திண்டுக்கல் மாவட்டம்–624622.

3. திரு. G.R.பாலசுப்பிரமணியம்,
   த/பெ. ராமசாமிசெட்டியார்,
   ரெட்டியபட்டி, சின்னகரட்டுபட்டிகிராமம்,
   ஒட்டன்சத்திரம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

4. திரு. கே.எம்.சுப்பிரமணியன், த/பெ. கே. முத்துச்சாமி,
   எண். 32, செந்தூர் இல்லம், சினேகம் கார்டன்
   கே.பி.என். காலனி 3வது வீதி,
   திருப்பூர் மாவட்டம்–641601.

5. திருமதி. சி.அன்னபூரனி, க/பெ. சிவக்குமார்,
கதவு எண். 129, SRS இல்லம், கருப்பணன், தெரு,
தும்மிச்சம்பட்டி, ஒட்டன்சத்திரம் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்–624619.

6. தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, பிரிவு 48–ன்படியும், அறங்காவலர் குழுவின் செயல்பாடுகள் குறித்த விதிகளில், விதி 18–ன்படியும், இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து 30 நாட்களுக்குள், அறங்காவலர்கள் தங்களுக்குள் ஒரு தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும். நியமனம் செய்யப்படும் அறங்காவலர்கள், மேற்படி சட்டத்தின் பிரிவு 47(3)–ன்படி, அறங்காவலர்களாக பதவியேற்ற நாளிலிருந்து இரண்டு ஆண்டு காலம் பதவி வகிப்பார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன் .B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திரு. க.தனசேகர், த/பெ, கந்தசாமி,
எண். 128/69, முதல் தெரு, புது அழகாபுரம்,
சேலம் வட்டம், சேலம் மாவட்டம்–636016.
திரு. சு.பாலசுப்பிரமணி, த/பெ. சுப்பையா,
எண். 5/168, கிழக்கு வீதி, S வாடிப்பட்டி அஞ்சல்,
கதிரையன்குளம், சில்வார்பட்டி வழி,
திண்டுக்கல் மாவட்டம்–624622.
திரு. G.R.பாலசுப்பிரமணியம்,
த/பெ. ராமசாமிசெட்டியார்,
ரெட்டியபட்டி, சின்னகரட்டுபட்டிகிராமம்,
ஒட்டன்சத்திரம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.
திரு. கே.எம்.சுப்பிரமணியன், த/பெ. கே. முத்துச்சாமி,
எண். 32, செந்தூர் இல்லம், சினேகம்
கார்டன் கே.பி.என். காலனி 3வது வீதி,
திருப்பூர் மாவட்டம்–641601.
திருமதி. சி.அன்னபூரனி, க/பெ. சிவக்குமார்,
கதவு எண். 129, SRS இல்லம், கருப்பணன், தெரு,
தும்மிச்சம்பட்டி, ஒட்டன்சத்திரம் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்–624619.
(இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
நகல்:–
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்